# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
## கலை கலாசார பீடம், புவியியற்றுறை
### இரண்டாம் வருடம் இரண்டாம் அரையாண்டு
### பொதுக்கலைமாணித் தேர்வு 2015/2016 (Nov./Dec. 2019)

| | | |
|---|---|---|
| GY 2213 | அனர்த்த முகாமைத்துவம் (Disaster Management) | நேரம் 03 மணித்தியாலங்கள் |

- பகுதி–I இல் இருந்து எவையேனும் **இரண்டு (02)** வினாக்களையும் பகுதி–II இல் இருந்து எவையேனும் **மூன்று (03)** வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து (05)** வினாக்களுக்கு விடை தருக.
- பொருத்தமான இடங்களில் விளக்கப்படங்களின் துணையுடன் விடையளிக்குக.
- எழுத்துக்கள், படங்கள் தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.

## பகுதி- I

1) அ. நலிவுறுநிலை (Vulnerability) என்றால் என்ன? வறுமை ஒரு சமுதாயத்தின் நலிவுறுநிலைக்குக் காரணமாகும் சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.

(07 புள்ளிகள்)

ஆ. மேலே வினா 'அ' வில் உம்மால் முன்வைக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் ஏதாவது இரண்டினைப்பற்றி விளக்குக.

(10 புள்ளிகள்)

2) அ. அனர்த்த முகாமைத்துவத்தில் பயன்படுத்தும் 4R என்பதனால் கருதப்படுவது யாது? அதன் படிநிலைகளை வரிப்படம் ஒன்றின் துணையுடன் விளக்குக.

(07 புள்ளிகள்)

ஆ. இழிவளவாக்கல் (Mitigation) செயன்முறையை முன்னெடுக்கின்ற பொழுது கவனத்தில் கொள்ளவேண்டிய செயற்பாடுகளின் ஒழுங்கினை வரிசைக்கிரமமாக முன்வைப்பதுடன், அவை பற்றிச் சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

3) அ. புவிப்பௌதீக அடிப்படையில் இலங்கைக்கு மீண்டும் ஒரு சுனாமியைத் தோற்றுவிக்கக்கூடிய மிகப்பெரிய அச்சுறுத்தல் யாதெனக் கருதுகின்றீர்?

(07 புள்ளிகள்)

ஆ. வினா 'அ' வில் குறிப்பிடப்பட்டதற்கு அமைய அத்தகையதொரு பாரிய அனர்த்தத்திலிருந்து எமது கரையோர சமூகத்தை மீட்டெடுக்க நீர் கூறும் உத்திகள் தொடர்பில் கருத்துரைக்குக.

(10 புள்ளிகள்)

## பகுதி- II

4) இற்கை அனர்த்தங்களை வகைப்படுத்தி, இலங்கையில் அவற்றின் போக்கு விளைவுகளும் குறித்து உதாரணங்களுடன் ஆராய்க.

(22 புள்ளிக

5) இலங்கையில் நிலச்சரிவு இடருக்கு பொறுப்பான இயற்கை மற்றும் மா காரணிகளை சுருக்கமாக முன்வைப்பதுடன் இலங்கையில் நிலச்ச ஆபத்தினைக் (Risk) குறைப்பதற்கு முன்னெடுக்கக் கூடிய பொருத்தமா வழிமுறைகள் தொடர்பில் ஆராய்க.

(22 புள்ளிக

6) அனர்த்த முகாமைத்துவம் ஒரு பாடம் (Subject) என்பதற்கு அப்பால் அது ஒரு வாழ்கைத்திறன் (Life skill) எனக் குறிப்பிடுவது எந்தளவுக்குப் பொருத்தமானது எனக் கருதுகின்றீர். தகுந்த உதாரணங்களை முன்வைத்து விளக்குக.

(22 புள்ளிகள்

7) பின்வருவனவற்றினுள் எவையேனும் இரண்டினிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

அ. பாடசாலைகளில் அனர்த்தக் கல்வியின் அவசியம்

ஆ. மின்னல் அனர்த்தமும் பாதுகாப்பும்

இ. அனர்த்த முன்னாயத்தத் திட்டம்

(2 x11=22புள்ளிகள்)